நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதிகளின் விவரம்

1. மதுரை
2. திண்டுக்கல்

(கே. பாலகிருஷ்ணன்)
செயலாளர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

12/3/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (12.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதிகளின் விவரம்

1. நாகப்பட்டினம்
2. திருப்பூர்

(ஆர். முத்தரசன்)
செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்மாநிலக் குழு

12/3/2024
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

முதல்வர் - ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து தற்போது வரை செயல்படுத்தப்படும்

நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சி!

தூத்துக்குடியில் அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தனர்

தூத்துக்குடி, மார்ச் 13-

தூத்துக்குடி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலை யத்தில் நேற்று (12.03.2024) அமைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியினை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் , மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் தமிழ்நாடு அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்து அனைத்து தரப்பட்டவர்களும் அறிந்து கொள்ளும் வகையிலும், விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பொருட்டும் இன்று சிறப்பு புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி தொடர்ந்து 4 நாட்கள் நடைபெறுகிறது.

மேலும் தமிழ்நாடு அரசு ஏழை எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களை தேடி மருத்துவம், உங்களை தேடி உங்கள் ஊரில், நீங்கள் நலமா, கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், பன்னாட்டு நிறுவனங்களுடன் புதிய தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம், முதலமைச்சரின் காலை உணவுதிட்டம், இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல், மகளிர் சுயஉதவிக் குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம், விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், நமக்கு நாமேதிட்டம் உள்ளிட்ட திட்டங்கள், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகள் குறித்து சிறப்பாக காட்சிபடுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்கள் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டதை நேரில் பார்வையிட்டது மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம், காணி பழங்குடியினர்களுக்கு நிலஉரிமை ஆணை வழங்கியது, 7 கிராமங்களை சேர்ந்த காணி பழங்குடியின மலைவாழ் மாணவ, மாணவியர்கள் கல்விகற்க இலவச படகு போக்குவரத்து, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சாலையை சீரமைத்தது, மீனவர்களின் நலன் கருதி பனிக்கட்டி நிலையங்களை திறந்து வைத்தல், புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டம், உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்ச ரால் வழங்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் மின்சாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியின்போது காலமானவர்களின் வாரிசுதாரர் களுக்கு பணி நியமன ஆணை வழங்கியது, பள்ளிமாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கியது, புதுமைப்பெண் திட்டம் குறித்தும், பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

அதேபோல தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர்களால் நமது மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள் குறித்தும் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. தூத்துக்குடி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்துகொண்டு பயன்பெறலாம்.

கலை பண்பாட்டுத்துறையின் மூலம் கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், தப்பாட்டம், நாகஸ்வரம் போன்ற கலைஞர்களை கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.அ.பிரம்மசக்தி, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர். ஜஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சே.ரா.நவீன்பாண்டியன், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.பிரபு, தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் திருமதி.செ. ஜெனிட்டா, மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் திருமதி.கலைச்செல்வி, தூத்துக்குடி வட்டாட்சியர் பிரபாகரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் செல்வக்குமார், முக்கிய பிரமுகர்கள் ஆனந்தசேகரன், உமரிசங்கர், ராமஜெயம், கிருபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தி.மு.க. இளைஞர்அணி சார்பில் சேலம் கழக இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டின் 25தீர்மானங்கள், திராவிட மாடல் அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகள் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க தெருமுனைப் பொதுக்கூட்டம் நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில்மாநிலமகளிர் அணிசெயலாளர்திருமதி.ஹெலன்டேவிட்சன், என். தில்லைசெல்வம், பூதலிங்கம்பிள்ளை, திருமதி.கரோலின் ஆலிவர்தாஸ், வழக்கறிஞர் ப. ஆனந்த், நாகூர்கான், அகஸ்தீசன், காதர்ரஹ்மான், ஜவகர், துரை, சேக்மீரான் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சாகித்ய அகாதமி விருது பெறும் தமிழ் எழுத்தாளர்

கண்ணையன் தட்சிணா மூர்த்திக்குப் பாராட்டுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

சென்னை. மார்ச் 13- The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

ஒரு வரலாற்று நிகழ்வை எடுத்துக் கொண்டு, அதனை மையமாக வைத்து, வடகிழக்குப் பகுதிகளின் பின்னணியில் புனையப்பட்ட The Black Hill நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காகச் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெறும் கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

செஞ்சியில் அ.தி.மு.க, – நாம் தமிழர்

கட்சியினர் 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்

செஞ்சி, மார்ச். 13-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் தொகுதி நாம் தமிழர் கட்சியின் தொகுதி செயலாளர் சுதாகர் தலைமையில் மயிலம் வடக்கு ஒன்றிய நாம் தமிழர் கட்சியின் செயலாளர் கண்ணையன், அ.தி.மு.க. வைச் சேர்ந்த முத்துக்குமார் மற்றும் நெடிமொழியனூர் ஊராட்சியைச் சேர்ந்த தென்னரவி, துளசி, ரூபா மாலா, அஞ்சலை, சாந்தி, கலைமதி, ஆதிலட்சுமி, தேவபிரசன்னா, பாண்டியன், சிவபாலன், மணியம்பட்டு ஊராட்சி சேர்ந்த விஜயலட்சுமி, ஜெல்லா மேரி, முனியம்மாள், செல்லம்மாள், கீழையூர் ஊராட்சியைச் சேர்ந்த கலைவாணி, ஜெயலட்சுமி, மங்கல லட்சுமி, சுசீலா, இந்திராணி, மாரியம்மாள், சிவகாமி, பூங்காவனம், ஜெயா, ஜெயம்மால், முத்துக்குமரன், தினேஷ், மதன், மணிகண்டன், சபரி, முகேஷ், பெரியாண்டப் பட்டு ஊராட்சியைச் சேர்ந்தமாரியம்மாள், வாசுகி, கவிப்பிரியா, சுமித்ரா, அஞ்சலை, அமுதா, சீதா லட்சுமி, அன்பரசி, வேளாங்கண்ணி, கண்ணன், வசந்த் உள்ளிட்ட 100 பேர் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஏர்வாய்ப்பட்டினம்ஊராட்சியில்முதலமைச்சர்கிராமசாலைமேம்பாட்டுதிட்டத்தின்கீழ் 2300 மீட்டர் தொலைவில் (144,56 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணியை கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் திட்டப் பணியை தொடங்கி வைத்தார். இதில் அன்புமணிமாறன், அருள், மணி, அய்யாவு, அன்பழகன் ஜோதி மற்றும் அதிகாரிகள், பன்னீர் ஜெயவேல், செந்தில், அருண்பிரசாத், விஜயன் மற்றும் வார்டு கவுன்சிலர்கள், வார்டு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.